**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.**39/2024
**Date**: 11.08.2025.
வா.சா.2 - திரு. ஜாண்பீட்டர்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விவசாயம் கூலி வேலை செய்கிறேன். வா.சா.ஆ–1 கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்தது ஜோசப் ெஹன்றி லியோ. அதில் நான் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். அதில் குறிப்பிட்டுள்ள பிரதிவாதியின் வயது பற்றிய விபரம் எனக்கு தெரியாது.என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். வாதியின் JS Finance என்ற பெயரில் பிராமிசரி நோட்டுஎழுதிக்கொடுத்தார். அதில் இரண்டு ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டிருந்தது. நான் கூறும் பிராமிசரி நோட்டு கைப்பட எழுதப்பட்டது என்றால் சரியல்ல, தட்டச்சு செய்யப்பட்டும் இருந்தது. என்ன விபரங்கள் தட்டச்சு செய்யப்பட்டவை, என்ன விபரங்கள் கையால் எழுதப்பட்டவை என்றால், என்னை சாட்சி கையெழுத்து கேட்டார்கள். மற்றும் JS Finance என்பது தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. பிரதிவாதியை கடன் வாங்கிய 21.01.2023 ற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால், சரிதான். கடன் வாங்கிய அன்று பார்த்தேன். பிரதிவாதி தான் தேவகி என்பதற்கு ஆதாரம் எதையும் நான் பார்க்கவில்லை. நான் JS Finance ல் நான் முன்பு கணக்கு வைத்திருந்தேன். 21.01.2023 என்ன கிழமை என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. நான் பணம் பெற்றுக்கொண்டு சாட்சி கையொப்பம் போடுவது வழக்கம் என்றால், சரியல்ல. எனக்கு முன்பு வா.சா.ஆ–1ல் கையொப்பம் போட்டவர் சிதம்பர பிரசாத். அவர் JS Finance ல் கணக்கு

வைத்திருகிறாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. சிதம்பர பிரசாத் எந்த பேனாவில் கையொப்பம் செய்தார் என்று நான் கவனிக்க வில்லை. 21.01.2023 ல் நான் JS Finance ற்கு கணக்கு வைக்க போகவில்லை, சும்மா தான் போனேன். 21.01.2023 ல் நான் JS Finance க்கு போகவில்லை என்றாலும், பிரதிவாதி அங்கு கடனுறுதி சீட்டு எதுவும் எழுதிக்கொடுக்கவும் இல்லை என்றால், சரியல்ல. இந்த விபரங்களை JS Finance ல் உள்ள Register ல் எழுதினார்கள். நான் வாதிக்கு உறவினர் என்பதினால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.